அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 2/96

எனது இல. 111/163/8/28/எல்/எல்/11
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம், கொழும்பு. 7
1996 ஜனவரி மாதம் 15 ஆந் திகதி.

செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
கூட்டுத்தாபனங்கள், நியதிச் சபைகளின்
தலைவர்கள் அனைவருக்கும்.

## ரம்ழான் பண்டிகைக் காலத்தில் விசேட விடுமுறை வழங்குதல்.

1995 ஜனவரி 27 ஆம் திகதிய, 05/95 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைக்குத் தங்களின் கவனம் கோரப்படுகின்றது.

02. 1996 ஆம் ஆண்டின் ரம்ழான்/ரம்சான் விழாக் காலத்தில் முஸ்லிம் அரச அலுவலர்களும் பணியாளர்களும் தொழுகையிலும் பிற மத வழிபாடுகளிலும் கலந்து கொள்வதற்கு ஒழுங்குகளைச் செய்யுமாறு நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

03. தொழுகைகள் நாளாந்தம் பின்வரும் நேர அட்டவணைப்படி நிகழும்.

| | | | | |
|---|---|---|---|---|
| மு.ப. | 3.00 முதல் | மு.ப. | 5.30 | வரை |
| மு.ப. | 6.00 முதல் | மு.ப. | 7.00 | வரை |
| பி.ப. | 6.00 முதல் | பி.ப. | 7.00 | வரை |
| பி.ப. | 8.00 முதல் | இரவு | 10.00 | வரை |

04. இக்காலங்களின் போது சமய வழிபாடுகளில் கலந்து கொள்ளக் கூடியதாக வேலை நேரங்களை ஒழுங்கு செய்து கொடுத்தல் வேண்டும். அவசியப்படும் சந்தர்ப்பங்களில் விசேட லீவு அங்கீகரிக்கப்படலாம்.

05. மேலும் 1996 ரம்ழான் (ரம்சான்) பெருநாளின் இறுதித் திகதிக்கு 14 நாட்களுக்கு முன்னதாக அரச சேவை கூட்டுத்தாபனங்கள் சட்டவாக்கச் சபைகள் ஆகியவற்றில் கடமையாற்றும் தகைமையுடைய முஸ்லிம் அலுவலர்கள்/பணியாளர்கட்கு விழா முற்பணம் வழங்கத் தயைபுரிந்து நடவடிக்கை எடுக்கவும்.

ஒப்பம்: ஆர். எஸ். ஜயரத்ன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு.